| | | | | |
|---|---|---|---|---|
| **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | |
| மாவட்டம் : | திண்டுக்கல் | காலம் : | 13/07/2022 முதல் | 17/07/2022 |
| அறிக்கை எண் : | 055/ 2022 | வெளியீட்டு நாள் : | 12/07/2022 | |

MSSRF
Science for Sustainable Development

### திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 33° - 38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25° - 28° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (08.07.2022 முதல் 11.07.2022) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 17-07-2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 08/07 | 09/07 | 10/07 | 11/07 | தேதி | நாள்-1 13/07 | நாள்-2 14/07 | நாள்-3 15/07 | நாள்-4 16/07 | நாள்-5 17/07 |
| 0.8 | 0.7 | 0.1 | 0.8 | மழை (மி.மீ) | 8 | 10 | 8 | 6 | 6 |
| 33 | 38 | 36 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 31 | 31 | 31 | 31 | 31 |
| 25 | 28 | 26 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 22 | 22 | 22 | 23 | 23 |
| 5 | 7 | 7 | 8 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 7 | 7 | 6 | 6 |
| 52 | 68 | 58 | 64 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 75 | 75 | 75 | 75 | 75 |
| 42 | 47 | 51 | 47 | | 65 | 65 | 65 | 65 | 65 |
| 13 | 11 | 13 | 13 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 14 | 14 | 14 | 14 | 14 |
| மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | **காற்றின் திசை** | தென்மேமேற்கு | தென்மேமேற்கு | தென்மேமேற்கு | தென்மேமேற்கு | தென்மேற்கு |

**குறுஞ்செய்தி** :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூலை 13, 14, 15 தேதி மிதமான மழையும், 16, 17 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 31° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 22° - 23° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 14 கி.மீ வேகத்தில், தென்மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

### அடுத்தது வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (15-21 ஜூலை2022):

**மழைப்பொழிவு :**

நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பை விட குறைந்த அளவு மழைப் பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

அடுத்த 7 நாட்களுக்கு மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொதுவாக இயல்பை ஒட்டி டியே காணப்படும். 28° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில், மாவட்டத்தில் அடுத்த 7 நாட்களுக்கு பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**இடி மின்னல் எச்சரிக்கை:**

வரும் 13.07.2022 மற்றும் 14.07.2022 தேதிகளில் தமிழகத்தின் ஒரு சில இடங்களில் இடி மின்னலுக்கான வாய்ப்பு உள்ளது. வயல்களில் ஆடுகளை கிடை அமர்த்துதல் மற்றும் மேய்ச்சலின் போது போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். இந்த காலகட்டத்தில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியே அனுப்பாமல், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள்.

## எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்

## முக்கிய பயிர்கள் : எலுமிச்சை, முருங்கை, கால்நடை

### எலுமிச்சை:

- எலுமிச்சையில் பழச்சாற்றை உறிஞ்சும் பூச்சி கட்டுப்படுத்த விளக்குப் பொறிகளை வைத்து அந்துப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம்.

### முருங்கை:

- முருங்கையில் நல்ல விளைச்சல் பெற செடி ஒன்றுக்கு 45 கிராம் தழைச்சத்து, 16 கிராம் மணிச்சத்து, 30 கிராம் சாம்பல் சத்து ஆகியவற்றை விதைத்த மூன்றாவது மாதத்தில் இட்டு நீர் பாய்ச்ச வேண்டும்.

### கால்நடை:

- வைக்கோல் மற்றும் மக்காச்சோளம் போன்ற தீவன பொருட்களை வெயிலில் நன்கு உலர வைத்த பின்பு கால்நடைகளுக்கு கொடுப்பதன் மூலம் அப்ளாடாக்ஸின் என்ற நச்சின் தாக்கத்திலிருந்து தங்களது கால்நடைகளைப் பாதுகாக்கலாம்.